# திருமறை ஆசான்

மலர் 8 APRIL இதழ் 4




வெளியிடுவோர்

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

**தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701**

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- 2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002.
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


பக்கம்

1. கிறிஸ்துவின் மரணம் 1
2. பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு பெற்றவர்கள் யார்? 8
3. உடன் பிறப்புகளுக்குள் பொறாமை 13
4. ஆகிலும், உன்பேரில் எனக்குக் குறை உண்டு 18
5. சபையைப் பற்றிய சில கேள்விகள் 20
6. கலப்பட கிறிஸ்தவம் 23
7. யெகோவா சாட்சி 26
8. இதோ, ஒரு நற்செய்தி போதகர்! 29
9. நான் சரியான சபையில் அங்கம் வகிப்பதை அறிவது எப்படி? 31

THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 8 APRIL Issue-4

## ஆசிரியவுரை

# கிறிஸ்துவின் மரணம்

உலகமானது இயேசுக் கிறிஸ்துவின் பிறப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும், பரிசுத்த வேதாகமம் கிறிஸ்துவின் மரணமே அதி முக்கியத்துவம் வாய்ந்தது என்று தீர்க்கமாகச் சொல்கிறது. ஆதித் திருச்சபை மக்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கூடி கிறிஸ்துவின் பிறப்பை அல்ல - அவருடைய தியாக மரணத்தை நினைவு கூறும் வண்ணமே கர்த்தரின் பந்தியில் கலந்துகொண்டனர் (அப் 20 : 7, கொரி11 :26)

உண்மையாகவே கிறிஸ்துவின் சிலுவை மனித வரலாற்றில் ஒரு திருப்புமுனை. ஆனால், நமதாண்டவரின் அப்பழுக்கற்ற, தூய்மையான பாவமற்ற, பரிசுத்தமான, மகிமை பொருந்திய வாழ்வைக் கணக்கிலெடுத்து அதோடு அவருக்கு நேர்ந்த மரணத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், அதைவிடக் கொடுமை ஏதாவது ஒன்று இருக்கமுடியுமா? என்று தான் எண்ணத் தோன்றும். என்ன செய்வது, அது தேவனுடைய சித்தமாயிற்றே!

சரி, இப்பொழுது, தேவ மைந்தனாகிய கிறிஸ்து ஏன் மரிக்க வேண்டியதாயிருந்தது? அவருடைய மரணத்தின் மூலம் நாம் கற்றுக் கொள்ளும் பாடங்கள் என்ன? என்று கீழே காண்போம்.

## I. இயேசு ஏன் மரிக்க வேண்டியதாயிருந்தது?

பெரும்பாலான சமயங்களில் கிறிஸ்துவின் மரணத்தை நாம் நினைக்கும் பொழுது, ரோம அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட அந்தச் சிலுவை மரணம் அவருக்குத் தேவைதானா? என்று எண்ணத் தூண்டும். ஆனால் வேதவாக்கியங்கள் அது தேவையானது என்றே சொல்கிறது. குறைந்தது மூன்று காரணங்களுக்காக அவர் மரிக்க வேண்டியது அவசியமாயிற்று.

### பாவமன்னிப்புக்காக

எபிரேயர் நிருபத்தின் ஆசிரியர். "இரத்தஞ் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது" என அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார் (எபி 9 : 22 ). நமதாண்டவருக்கு முன்னோடியாக, வழிகளை ஆயத்தம் பண்ண வந்த யோவான் ஸ்நானகன் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு : "இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்றார் (யோவா 1 :29) மேலும் வெளிப்படுத்தல் புத்தகம். "தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவினார்" (வெளி 1 : 6) என்று சொல்கிறது. தன்னுடைய பக்தி வைராக்கியத்தால், புதிய ஏற்பாட்டில் தனக்கென ஒரு இடத்தை நிரந்தரமாகப் பிடித்துக் கொண்ட பவுலடியார், கொரிந்து பட்டணத்தாருக்கு நிருபம் எழுதும்பொழுது, இன்னும் தெளிவாகவும், புரியும்படியாகவும் சொல்வதைக் கவனியுங்கள். ". . . நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே" என்கிறார். (1 கொரி 5:7). அதாவது, எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்த இஸ்ரவேலருக்கு பஸ்காவின் மூலம் விடுதலை கிடைத்ததைப் போல உலக மக்களுக்கு பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து கிறிஸ்து தமது மரணத்தின் மூலம் விடுதலை வாங்கிக் கொடுத்தார் என்று கூறுகிறார்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் பிரதான ஆசாரியர் ஜனங்களுடைய பாவங்களுக்காகவும், தன்னுடைய பாவங்களுக்காகவும் பலி செலுத்துவதின் மூலம் பெற்றுக் கொடுத்த விடுதலை முற்றிலும் தற்காலிகமானது. வருடந்தோறும் அதைச் செய்ய வேண்டியதிருந்தது. ஆனால், கிறிஸ்துவின் மரணமோ பாவத்திலிருந்து நிரந்தர விடுதலையைப் பெற்றுத் தந்தது.

## தேவனுடைய நித்திய நோக்கம்

தேவனுடைய நித்திய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, கிறிஸ்து சிலுவையில் மரித்தார். அநேக சமயங்களில் அளவு கடந்த ஞானமுள்ள தேவனுடைய நித்திய நோக்கத்தை, குறைந்த அறிவுள்ள மனிதனால் கிரகித்துக் கொள்ள முடிவதில்லை. தான், பரலோக மேன்மையிலிருந்து பூலோகத்திற்கு இறங்கி வந்ததன் நோக்கத்தை கிறிஸ்து இவ்வாறாக விவரிக்கிறார்.

"என் சித்தத்தின் படியல்ல. என்னை அனுப்பினவருடைய சித்தத்தின் படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன் என்றார் (யோவா 6 : 38) ஆதியிலே தன்னால் ஆசையோடு படைக்கப்பட்ட ஆதாமையும், ஏவாளையும் தன்னுடைய வஞ்சக வார்த்தைகளால் சாத்தான் பாவத்திற்குட்படுத்தின பொழுது, தேவன் சாத்தானை எச்சரித்தார். " . . . . அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" என்றார் (ஆதி 3 : 15). இந்த வாக்குத்தத்தம் இயேசுக் கிறிஸ்து பாவமில்லாமல் வாழ்ந்து, சிலுவை மரணத்தை வென்று உயிர்த்த பொழுது நிறைவேறிற்று. சாத்தானின் தலையும் நசுக்கப்பட்டது.

ஆக தேவனுடைய நித்திய நோக்கத்தை நிறைவேற்ற கிறிஸ்து மரிக்க வேண்டியிருந்தது.

## மனிதனை தேவனோடு ஒப்புரவாக்க

ஆதிப் பெற்றோர், ஏதேன் தோட்டத்தில் பாவம் செய்த பொழுது தேவனாகிய சிருஷ்டிகருக்கும், மனிதனாகிய சிருஷ்டிக்கும் இருந்த அற்புதமான உறவு அறுந்து போனது. பரிசுத்த தேவனிடமிருந்து மனிதன் பிரிக்கப்பட்டான். பாவம் தான் மனிதனை தேவனிடமிருந்து பிரிக்கிறது என்பதை ஏசாயா தீர்க்கன் எடுத்துச் சொல்கிறார். "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" (ஏசா 59 : 2).

இப்படிப் பாவத்தினால் தேவனிடமிருந்து பிரிந்து போன மனிதனை, மீண்டும் தேவனோடு ஒப்புரவாக்க கிறிஸ்துவின் மரணம் அவசியமாயிற்று. "பகையைச் சிலுவையினால் கொன்று அதினாலே

இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்" என்று எபேசியரில் காண்கிறோம். (எபே 2 : 16) மீண்டும் பவுலடியார் ரோமாபுரியாருக்கு எழுதும் பொழுது, "நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில் அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோம்" என்கிறார். (ரோம 5 :10) கிறிஸ்துமாத்திரம் மரித்திராவிட்டால் மனிதன் தேவனோடு ஒருபோதும் ஒப்புரவாகியிருக்க முடியாது.

ஆக, பாவ மனிதனை, பரிசுத்த தேவனோடு ஒப்புரவாக்க கிறிஸ்து சிலுவையில் மரிக்க நேர்ந்தது.

## II. கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் அறிய வேண்டிய பாடங்கள்

இயேசுக் கிறிஸ்து ஏன் மரிக்க வேண்டியதாயிருந்தது என்று பார்த்தோம். கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய உண்டு. அத்தியாக மரணத்தின் நோக்கத்தை அதன் மூலம் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களை, அவரைப் பின்பற்ற விரும்பும் பிள்ளைகள் யாவரும் தெளிவாகப் புரிந்து கொண்டால், மத உலகில் இன்று நிலவும் பெரும்பாலான குழப்பங்களைத் தவிர்த்து, தேவனுக்குப் பிரியமான மெய்ப் பிள்ளைகளாக வாழமுடியும். இப்பொழுது முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய மூன்று பாடங்களைக் கவனிப்போம்.

## மோசேயின் பிரமாணம் எடுத்துப்போடப்பட்டது

கிறிஸ்துவின் தியாக மரணத்தால் கிடைத்த சுவிசேஷத்தை அறிந்து ஏற்றுக் கொண்டு அதில் நிலைத்திராமல், பழைய பிரமாணத்திற்குத் திரும்பிச் சென்ற கலாத்தியா பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு, புதிய பிரமாணத்தின் மேன்மையைக் குறித்து பவுல் இவ்வாறாகக் குறிப்பிடுகிறார். ". . . நீதியானது நியாயப் பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே. (கலா 3:21). எபிரேயர் நிருபமும் இதைக் குறித்து சந்தேகத்திற்கிடமின்றிப் பேசுகிறது. "புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார். பழமையானதும் நாள்பட்டது மாயிருக்கிறது உருவழிந்துபோகக்காலம் சமீபித்திருக்கிறது" (எபி 8 : 13) ". . . . இரண்டாவதை நிலை நிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார் (எபி 10 :9). மேலும், இதே நிருபம் கிறிஸ்து புது உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராயிருக்கிறார் என்றும் சொல்கிறது. (எபி 8 : 6).

இரண்டு உடன்படிக்கைகள் ஒரே நேரத்தில் அமலில் இருக்கமுடியாது என்பதை நாமனைவரும் ஏற்றுக் கொள்வோம். ஆனால் இன்றைக்கு பெரும்பாலான கிறிஸ்துவச் சமுதாயம் இரண்டு உடன்படிக்கைகளுக்கும் வித்தியாசம் தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறது. தாங்கள் விரும்புகிற, தங்களுக்குச் சௌகரிய மாயிருக்கின்ற சில மோசேயின் பிரமாணங்களைத் தொடர்ந்து பின்பற்றி கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை அவமாக்கிக் கொண்டுள்ளனர். தன்னால் முடித்து வைக்கப்பட்ட ஒரு உடன்படிக்கைக்கு, உயிர் கொடுக்க முயற்சிப்பதை தேவன் ஒரு போதும் அங்கீகரிக்கமாட்டார்.

மோசேயின் பிரமாணத்தை, புதிய ஏற்பாட்டின் கீழ் வாழும் நாம் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. அது நம்மைக் கட்டுப்படுத்தாது. அதற்காக, அதை நாம் தெரிந்து கொள்வதே தவறாகாது. ஏனெனில், "...முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. (ரோம் 15 :4).

## அவருடைய சபை தோற்றுவிக்கப்பட்டது

மத்தேயு பதினாறாம் அதிகாரத்தில் தன்னுடைய சபையை ஸ்தாபிக்கப் போவதாக இயேசு வாக்களித்தார். ஒரு சமயம், மனித குமாரனாகிய தன்னை ஜனங்கள் யாரென்று நினைக்கிறார்கள் என்று இயேசு தம்முடைய சீடர்களைப் பார்த்துக் கேட்டார் (16 : 13) அக்கேள்விக்கு சரியான பதிலை அவர் பெற்றுக் கொள்ளாத பொழுது, சீடர்களே, நீங்கள் என்னை யாரென்று நினைக்கிறீர்களென்று கேட்டார். (16:15). அப்பொழுது பேதுரு அழுத்தம் திருத்தமாக, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்றான் (16:16). அப்பொழுதுதான், இயேசு பேதுருவைப் பார்த்து " ....நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள் வதில்லை" என்றார் (16:18).

ஆனால், அவருடைய எதிரிகளோ அவரை மரணத்திற்கு ஒப்புக்கொடுப்பதன் மூலம் அவருடைய செல்வாக்கைச் செயலிழக்கச் செய்துவிடலாம் என்று தவறாக எண்ணினர். ஆனால் நம்முடைய கிறிஸ்துவோ மரணத்தை வென்று, கல்லறையிலிருந்து வெற்றி வீரராக எழுந்தார். பரிசுத்த ஆவியானவரை அனுப்பி, அப்போஸ்தலர்களை பெலத்தால் இடைக்கட்டி, சபையின் உண்மைத் தன்மையை உலகுக்கு காட்டினார். ஆம், இயேசுக்கிறிஸ்து உயிர்த்தெழுந்து வந்த ஐம்பதாவது

நாளாகிய பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு அப்போஸ்தலன் கேட்டோரின் உள்ளத்தை உடைத்த ஒரு பிரமாதமான பிரசங்கத்தைச் செய்தார். இயேசுக் கிறிஸ்து மரணத்தை வென்றார் என்பதே அப்பிரசங்கத்தின் மையப் பொருள். அந்நாளில் சபையானது எருசலேம் பட்டணத்தில் முறையாகத் தோற்றுவிக்கப்பட்டது. அதுமுதல் இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் தமது சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார் (அப். 2 : 47) ஆம் அவருடைய மரணத்தின் மூலமாகக் கிடைத்த ஆசிர்வாதங்களில் மிகப் பெரியது "கிறிஸ்துவின் சபை"

## உயிர்த்தெழுதலின் நம்பிக்கை

இப்பூமியில் வாழும் திரளான மக்கள் உயிர்த்தெழுதலைக் குறித்த நம்பிக்கையற்றவர்களாக இருக்கும் பொழுது, கிறிஸ்தவர்களாகிய நமக்கு அந்த நம்பிக்கை எப்படிக் கிடைத்தது? கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலுமே நம்முடைய நம்பிக்கையின் அஸ்திவாரம்.

இயேசுக் கிறிஸ்து இப்பூவுலகில் ஊழியம் செய்த நாட்களில், தான் அடிக்கடி சந்தித்த, தன்னை நேசித்து, ஏற்று, உபசரித்த குடும்பத்தைச் சேர்ந்த லாசரு மரித்துப் போனான். செய்தி கேட்ட இயேசு அங்கு வந்து சேர்கிறார். லாசருவை உயிரோடே எழுப்புமுன் மார்த்தாளோடு ஒரு உரையாடல் நடக்கிறது. அப்பொழுது ஒரு அற்புதமான செய்தியை கர்த்தர் வெளிப்படுத்தினார். "இயேசு மார்த்தாளை நோக்கி : நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" என்றார் (யோவா 11 : 25). ஆயினும், இயேசு மரணத்தை வென்றபோது தான் அது மேலும் உறுதியாக்கப்பட்டது.

ஆம், இயேசுக் கிறிஸ்து வரும்பொழுது, "பிரேதக் குழிகளில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்பார்கள்" (யோவா 5 : 28) முதலாம் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவர்கள் பாடுகளால் வேதனைப்பட்ட பொழுது உயிர்தெழுதலின் நம்பிக்கையை வைத்துத் தான் ஒருவரையொருவர் தேற்றிக் கொண்டார்கள் (I தெச 4 :13-18). இயேசுக் கிறிஸ்து உயிர்த்தெழுந்து பரலோகத்திற்குச் சென்றுள்ளபடியால், அவரைப் பின்பற்றும் நாமும் ஒரு நாளில், பரலோகம் செல்வோம் என்பதற்கு முன்னோடியாக அவர் இருக்கிறார்.

இந்த வர்ணிக்க முடியாத ஈவை கிறிஸ்துவின் மரணமே நமக்குப் பெற்றுத் தந்தது.

கர்த்தருக்குள் அருமையானவர்களே, கிறிஸ்துவின் மரணத்தை நாம் ஒப்புக்காக நினைக்காமல், அதன் மெய்யாந நோக்கத்தை அறிந்து, அவைகளை நம்முடைய வாழ்க்கையில் நிறைவேற்றுவோம். அதன் மூலம் பரலோக பாக்கியத்தைப் பெற்றுக் கொள்வோம்!

EZS ராஜநாயகம்.

# மோசம் போகாதே!

"அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும் போது, மரணத்தைப் பிறப்பிக்கும். என் பிரியமான சகோதரரே, மோசம் போகாதிருங்கள்" (யாக்கோபு 1 : 14 -16).

## தீர்வு என்ன?

"நீங்கள் எல்லாவித அழுக்கையும், கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள். அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாத படிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள். சுயாதீனப் பிரமாணமாகிய பூரண பிரமாணத்தை உற்றுப் பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்". (யாக்கோபு 1 : 21 - 25).

# பெந்தேகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு பெற்றவர்கள் யார்?

'பரிசுத்த ஆவியானவரின் பணி' என்னும் தொடர் கட்டுரைகளில் இம்மாதம் நாம் எடுத்துக் கொண்ட பகுதி தலைப்பில் காணும் கேள்வியாகும். இது ஒரு முக்கியமான கேள்வி. ஏனென்றால், அப்போஸ்தலருடைய நடபடி 1ம் அதிகாரம் 15ம் வசனத்தில் காணப்படும் 120 சீடர்களும், மற்றும் அப்போஸ்தலர்களும் பரிசுத்த ஆவியானவரின் அற்புத வல்லமைகளைப் பெற்றனர் என்ற ஒரு தவறான முடிவில் கிறிஸ்துவின் விசுவாசிகள் பலர் இருக்கின்றனர்.

நாம் முந்தைய பாடங்களில் பார்த்தது போல, கிறிஸ்து தேற்றரவாளனை அல்லது பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக அப்போதலர்களுக்கு மட்டுமே வாக்களித்தார். (யோவான் 14 : 26). அனைவருக்கும் அனுப்புவதாக பொதுவான வாக்கு எதையும் அவர் அளிக்கவில்லை. அடுத்து, உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என தமது அப்போஸ்தலர்களை இயேசு கேட்டுக் கொண்டார். (லூக்கா 24 : 49). அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்ட பின்னர், அவர்கள் எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், அவருக்கு சாட்சியாக இருப்பார்கள் என்றார். (அப் 1 : 8) மீண்டும், இவ்வாறாக அப்போஸ்தலர்களிடம் மட்டுமே பேசினார். சீடர்கள் யாரிடமும் பொதுவாக பேசவில்லை. எனவே அப்போஸ்தலருடை நடபடி 1, 2 அதிகாரங்களுக்கு நாம் வரும்போது, அங்கு நடந்தவை அனைத்தையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அப்போஸ்தலருடைய நடபடி 1ம் அதிகாரத்தின் முற்பகுதியில் கிறிஸ்து பரலோகத்திற்கு எவ்வாறு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்பதை லூக்கா விளக்கிக் கொண்டிருக்கிறார் : "... இயேசுவானவர் தாம் தெரிந்து கொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு, ... நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி :

யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். (அப். 1 : 1-5). இப்போது இந்த விவரங்களை நீங்கள் படிக்கும் போது, அவர் தேர்ந்தெடுத்த அப்போஸ்தலர்களிடம் மட்டுமே கர்த்தர் பேசிக் கொண்டிருந்தார் என்பதை தெளிவாகக் காணமுடியும். எருசலேமில் அவர்களை தங்கியிருக்கும் படியும், சில நாட்களில் பரிசுத்த ஆவியை அவர்கள் பெறுவார்கள் என்றும் அவர் கூறினார். யோவான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்ததையும் அவர்களோ பரிசுத்த ஆவியால் திருமுழுக்குப் பெறுவார்கள் என்பதையும் அப்போஸ்தலர்களுக்கு அவர் நினைப்பூட்டினார். அப்படியானால், கர்த்தர் யாரிடம் பேசிக் கொண்டிருந்தார் என்பதிலோ, யாருக்கு பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை வாக்களித்தார் என்பதிலோ சந்தேகம் இருக்கிறதா? நிச்சயமாக, அப்போஸ்தலர்களிடம் மட்டுமே அவர் பேசிக் கொண்டிருந்தார்; அவர்களுக்கு மட்டுமே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கை வாக்களித்தார். ஆனால் மீண்டுமாக, நீங்கள் உன்னிப்பாகக் கவனிக்கும் போது, கர்த்தர் அப்போஸ்தலர்களிடம் மட்டுமே பேசிக் கொண்டிருந்தார் என்பதையும், அவர்களைப் பற்றியும் பல சந்தர்ப்பங்களில் கீழ்க்கண்டவாறு பேசினார் என்பதையும் நீங்கள் காண்பீர்கள் : " . . . அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும் போது . . . எருசலேமை விட்டுப் போகாமல் . . . காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்". "நீங்கள் பரிசுத்த ஆவியினாலே திருமுழுக்குப் பெறுவீர்கள்" என்றும் அவர் சொன்னார். எனவே "நீங்கள்" "அவர்கள்" என்றெல்லாம் அவர் அழைப்பது அப்போஸ்தலர்களை மட்டுமே என்பதைக் காண்க. இந்த சந்தர்ப்பங்களில் மட்டுமின்றி, அப்போஸ்தலருடைய நடபடிகள் 1,2 அதிகாரங்கள் முழுவதும் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 1ம் அதிகாரத்தின் பிற்பகுதியில், கர்த்தரைக் காட்டிக் கொடுத்து, தற்கொலை செய்து கொண்ட யூதாஸுக்குப் பதிலாக சீடர்களிடமிருந்தும், அங்கு கூடியிருந்த 120 பேர்களிடமிருந்தும் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் பணியில் அப்போஸ்தலர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். யோவான் திருமுழுக்கு கொடுத்து வந்த நாள் முதற்கொண்டு கர்த்தராகிய இயேசுவானவர் உயர எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும், அவர் அப்போஸ்தலர்களுடன் சஞ்சரித்த காலங்களிலெல்லாம்

அவர்களுடனேகூட இருந்த மனிதர்களில் ஒருவனே அப்போஸ் தலனாகத் தகுதி பெற்றவன் என்பதைக் காண்கிறோம். வேறு விதமாகக் கூறினால், கர்த்தர் உயிரோடு எழுந்ததை அப்போஸ்தலர் களுடனே கூட சாட்சி சொல்லுகிறவனாக இருக்க வேண்டும். எனவே, "அப்பொழுது அவர்கள் யுஸ்து என்னும் மறுநாமமுள்ள பர்சபா என்னப்பட்ட யோசேப்பும் மத்தியாவும் ஆகிய இரண்டு பேரையும் நிறுத்தி : எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிற கர்த்தாவே, யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தலப் பட்டத்திலும் பங்கு பெறுவதற்காக, இவ்விரண்டு பேரில் தேவரீர் தெரிந்து கொண்டவனை எங்களுக்குக் காண்பித்தருளும் என்றுஜெபம் பண்ணி; பின்பு, அவர்களைக் குறித்துச் சீட்டுப் போட்டார்கள்; சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது; அப்பொழுது அவன் பதினொரு அப்போஸ்தலருடனே சேர்த்துக் கொள்ளப் பட்டான்". (அப். 1 : 23 -26).

இப்போது, சீடர்களிடமிருந்து இருவரைத் தேர்ந்தெடுத்து அவர்களில் ஒருவரை அப்போஸ்தலனாக்கும் பணியில் ஈடுபட்டிருந் தவர்கள் யார்? சந்தேகமின்றி, அப்போஸ்தலர்கள் தான். அப்போஸ்தலனாகத் தகுதியுள்ளவனைத் தேர்ந்தெடுக்கும்படி தங்களுக்குக் காட்ட, கர்த்தரிடம் ஜெபம் செய்து சீட்டு போட்டுப் பார்த்தவர்கள் யார்? மீண்டும், அவர்கள் அப்போஸ்தலர்கள் தான் என்பதே பதில் மத்தியா தேர்ந்தெடுக்கப்பட்ட பின், யாரோடு சேர்த்துக் கொள்ளப்பட்டான்? வசனம் கூறுவது போல, பதினொரு அப்போஸ்தலர்களுடனே சேர்த்துக் கொள்ளப்பட்டு, இப்போது அவர்கள் பனிரெண்டு அப்போஸ்தலர்கள் ஆயினர். எனவே, சங்கிலித் தொடர் போன்று நடைபெற்ற சகல காரியங்களும், அப்போஸ்தலர்களுடன் சம்பந்தப்பட்டவைகளாகவே இருந்திருக் கின்றன. ஆம், அவை அனைத்தும் அப்போஸ்தலர்களையே குறிக்கின்றன.

இப்போது நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் 1ம் அதிகாரத்தின் இறுதிக்கு வந்துவிட்டதைக் கவனியுங்கள். தொடர்ந்து 2ம் அதிகாரத்திற்குச் செல்லவிருக்கிறோம். ஆனால், மூல கையெழுத்துப் பிரதி அதிகாரங்களாகவும், வசனங்களாகவும். பிரிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, எண்ணக் கோர்வைகளும், செயல்பாடுகளும் தொடர்ச்சியாக வந்த வண்ணமிருந்தன. ஆகவே, அப்போஸ்தலர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தால் அவைகளைத் தொடர்ந்து நாம் படிப்போம் : "பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒரு மனப்பட்டு, ஒரிடத்திலே வந்திருந்தார்கள் "(அப். 2 : 1). இப்போது, இங்கு பேசப்படுவோர்

அப்போஸ்தலர்களாக மட்டுமே இருந்தால், பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்கள் அதாவது அப்போஸ்தலர்கள், ஒரு மனப்பட்டு ஓரிடத்திலே கூடியிருந்தனர் என்று காண்கிறோம். தொடர்ந்து வசனம் கூறுகிறது : " அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று". (அப் 2 : 2). இந்த முழக்கம் யார் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று? அப்போஸ்தலர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பியது. "அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்கு" அதாவது, அப்போஸ்தலர்களுக்கு, "காணப்பட்டு, அவர்கள் "அதாவது, அப்போஸ்தலர்கள் எல்லாரும், "பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத்" அதாவது, அப்போஸ்தலர்களுக்கு, "தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்". (அப். 2 : 3,4). பின்னர், பேதுரு பதினோரு பேருடன் கூட நின்று உரத்த சத்தமாய் பேசலானான். இந்த 11 பேரும் யார்? அப்போஸ்தலர்கள் தான். மேலுமாக, பேதுரு விளக்கினான்; இந்த மனிதர்கள், (அப்போஸ்தலர்கள்) மது அருந்தியிருக்கவில்லை; ஆனால் யோவேல் தீர்க்கதரிசியால் கூறப்பட்டது போல கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் தேவன் தமது ஆவியை ஊற்றுவார் (அப். 2 : 14-17). அதை அவர் செய்தாரா? ஆம், தமது ஆவியின் வித்தியாசமான அளவுகளை பலருக்கும் அளித்தார். அப்போஸ்தலர் களுக்கு பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைக் கொடுத்தார். பின்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட சீடர்களின் மேல் அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து, அப்போஸ்தலருடைய நடபடிகள் 6ம் அதிகாரத்தில் வர்ணிக்கப்பட்டிருப்பது போல, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை அவர்களுக்குக் கிடைக்கச் செய்தார். இறுதியாக, பிற யாவரும், நமது காலம் வரையிலும் கூட, கர்த்தருக்குக் கீழ்ப் படியும் போது பரிசுத்த ஆவியானவரின் கனிகளை அல்லது அற்புதம் செய்யக் கூடாத அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுகின்றனர். (அப். 2:38). அது மட்டுமல்லாமல், அப்போஸ் தலருடைய நடபடிகள் 2ம் அதிகாரத்தை தொடர்ந்து படித்தால், அன்றைய தினத்தில் அங்கு கூடியிருந்தவர்களுக்கு அப்போஸ்தலர்கள் நற்செய்தியைப் போதிக்க, ஏறக் குறைய 3000 பேர் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, பாவமன்னிப்பும் பெற்று, பரிசுத்த ஆவியானவரின் கனிகளையும் பெற்றனர் என்பதையும், கர்த்தர் தமது சபையிலே அவர்களை சேர்த்துக் கொண்டார் என்பதையும் நாம் பார்க்கிறோம். அதே அதிகாரத்தில், கர்த்தருக்கு கீழ்ப்படிந்தவர்கல் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய் தரித்திருந்தார்கள் என்றும், அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டன என்றும்

குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, அப்போஸ்தலர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதைக் காணமுடியும். ஏனெனில், அன்றைய நாளில் அப்போஸ்தலர்கள் மட்டுமே பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றுக் கொண்டார்கள். அங்கிருந்த 120 பேரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருந்தால், மேலும் அந்த 3000 பேரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருந்தால், அங்கு நடந்ததைவிட பெரிய அளவிலான அற்புதங்களும் அடையாளங்களும் நிகழ்ந்திருக்கும். மேலும், அவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்று, அற்புதங்கள் செய்யும் வல்லமையையும் பெற்றிருந்தால், அப். நடபடிகள் 6ம் அதிகாரத்தில் காணப்படுவது போல, சீடர்களில் 7 பேரை தேர்ந்தெடுத்து அப்போஸ்தலர்கள் அவர்கள் மேலே கையை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையை அவர்களுக்கு அளிக்க வேண்டிய அவசியம் என்ன? இவை அனைத்தையும் சிந்தித்துப் பாருங்கள். உண்மை பளிச்சென்று உங்களுக்குத் தோன்றும்.

J.C. சோட்

## எச்சரிக்கையாயிரு, அல்லது வீழ்ந்து போவாய்!

"தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடி எச்சரிக்கையாக இருக்கக்கடவன். மனிதருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை". (1 கொரி. 10 : 12 - 13).

தீர்வு என்ன?

"தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக் கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார். ஆகையால் எனக்குப் பிரியமான வர்களே, விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள்." ( 1 கொரி. 10 : 13 - 14).

## பெண்கள் பகுதி

# "உடன் பிறப்புக்களுக்குள் பொறாமை"

"இஸ்ரவேலின் முதிர் வயதிலே யோசேப்புத் தனக்குப் பிறந்ததினால், இஸ்ரவேல் தன் குமாரர் எல்லாரிலும் அவனை அதிகமாய் நேசித்து, அவனுக்குப் பலவருணமான அங்கியைச் செய்வித்தான்.

அவனுடைய சகோதரர் எல்லாரிலும் அவனைத் தங்கள் தகப்பன் அதிகமாய் நேசிக்கிறதை அவன் சகோதரர் கண்ட போது, அவனோடே பட்சமாய்ப் பேசாமல் அவனைப் பகைத்தார்கள். (ஆதி : 37 : 3, 4).

பீட்டர் என்பவர் கடைக்குப் போகவேண்டுமென்று வெளியே வந்தபோது தன் மகன் ஜேம்ஸை அழைத்து, "நீ என்னுடன் கடைக்கு வர விரும்பு கிறாயா?" என்று கேட்டார்.

தகப்பனாருடன் சென்றால் கட்டாயம் தனக்கு ஐஸ்கிரீம் கிடைக்குமென்ற நம்பிக்கையில் ஓடிவந்து தன் தந்தையுடன் சேர்ந்து கொண்டான்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த ஜேம்ஸின் சகோதரன் அந்தோணி, தன் தாயிடம்,"ஏன், அப்பா எப்பொழுதும் ஜேம்ஸை -யே தன்னுடன் அழைத்துச் செல்கிறார்? ஏன் என்னையும் தன்னுடன் அழைத்துப் போகக் கூடாது? என்னைக் காட்டிலும் அவனை அதிகம் நேசிப் பதினால் தானே". என்றான்.

ஆண்டனியின் உணர்வு களை புரிந்து கொண்ட தாய் அவனைத் தேற்றும் வகை யில்,"அப்படியல்ல மகனே, அப்பா, அவனையும், உன்னை யும் ஒரே மாதிரி தான் நேசிக் கிறார். அவன் சின்னப் பைய னாக இருப்பதால் அவனை அழைத்துப் போயிருக்கலாம்; இதை நீ தவறாக எடுத்துக் கொள்ளாதே" என்றாள்.

பிறகு பிள்ளைகள் இருவரும் வெளியே சென்றபின்பு மேரி தன் கணவனாகிய பீட்டரைப் பார்த்து,

"நான், உங்களிடம் மிக முக்கியமான ஒன்றைக் குறித்துப் பேச வேண்டும். இன்றைக்கு ஜேம்ஸை மாத்திரம் கடைக்கு அழைத்துச் சென்றதினிமித்தம் அப்பா தன்னை நேசிக்க வில்லையா? என்று ஆண்டனி கேட்டான். ஒருவேளை, அவன்

பொடியன் என்பதால் நீங்கள் அப்படிச் செய்திருக்கலாம். ஆனால் அச் செயலினால் ஆண்டனியின் மனது பாதிக்கப் பட்டிருக்கிறது" என்று கூறினாள்.

பீட்டர் இதைக் குறித்து யோசித்தான். ஆண்டனியின் உணர்வுகளைப் புரிந்து கொள் ளாமல், ஜேம்ஸ் -ஐ மாத்திரம் கூட்டிச் சென்ற சமயங்களை எண்ணிப் பார்த்தான். "நான் ஏன் இவ்வாறு செய்தேன்?" என்று தனக்குள்ளாகவே சிந்தித் தான்." நான் ஜேம்ஸ்-ஐ அதிகம் நேசிக்கிறேனா? அவன் என் னைப் போலவே இருக்கிற படியால் அவனைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன். ஆனால் ஆண்டனி மற்றும் அசீமாவைக் குறித்தும் நான் பெருமைப் படவே செய்கிறேன். அவர் களைப் புண்படுத்தக் கூடாது. ஜேம்ஸினிமித்தம் அவர்களுக் குள் பொறாமை ஏற்படுத்தலா காது. அவர்களுக்கு என் நிலையை விளக்குவேன்" என்று தனக்குள்ளாகவே பேசிக் கொண்டான்.

அன்று இரவில் ஆண்ட னியும், ஜேம்ஸும் படுக்கைக்குச் சென்ற போது பீட்டர் அவர் களுடன் வந்து உட்கார்ந்தான். அவர்களைப் பார்த்து, "பிள்ளைகளே, உங்களோடு சில காரியங்களை நான் பேச வேண்டும். நான் இவ்வளவு நாட்களாக ஒரு தவறைச் செய்து வந்தேன். ஆண்டனியை வீட்டில் விட்டு, ஜேம்ஸை மாத்திரம் கடைக்கு அழைத்துச் செல்வேன். இருவரையும் ஒன்றாக அழைத் துச் செல்ல வாய்ப்பில்லை யென்றால் நான் உங்கள் இருவரையும் நேசிப்பதால் ஒருவனை ஒருமுறையும், மற்ற வனை அடுத்த முறையும் அழைத்துச் சென்றிருக்கலாம். அவ்வாறு செய்யாமல் ஆண்ட னியின் உணர்வுகளைப் புண் படுத்திவிட்டேன். அதற்காக வருந்துகிறேன்" என்றார்.

இவ்வாறு கூறி தன் மக்கள் இருவரையும் கட்டி அணைத்துக் கொண்டார். பிறகு பிள்ளைகள் முழங்காலில் நிற்க தான் கர்த்தரை நோக்கி, "எங்கள் தகப்பனே, நாங்கள் உமது பிள்ளைகளாய் இருப்பதற்கு ஸ்தோத்திரம். எங்கள் எல்லோரையும் நீர் ஒரேமாதிரி நேசிப்பதற்கு நன்றி. இளைய மகன் ஜேம்ஸ்-ஐ நான் பட்சமாய் நடத்தினதற்காக என்னை மன்னியும் இவர்களுக்குள் தவ றான எண்ணத்தை ஏற்படுத்து வதையோ, ஆண்டனியை வே தனைப்படுத்தவோ நான் விரும்பவில்லை. பிதாவே, நான் நல்ல, புத்தியுள்ள தகப்பனாக இருக்க உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் இந்த உதவியைக் கேட்கிறோம், ஆமென்" என்று ஜெபித்து முடித்தார்.

பூமிக்குரிய பெற்றோராகிய நம்மிடம், நம்முடைய பிள்ளைகளை அநேக ஆண்டுகளுக்கு தேவன் ஒப்படைத்ததின் நோக்கம், அவர்களை ஒரு பொறுப்புள்ள பெரியவர்களாக மாற்றும் பயிற்சியைக் கொடுப்பதற்குத் தான். மனித வாழ்க்கையைப் போலவே, குழந்தைப் பருவமும், தேவனோடு வாழும் நித்திய வாழ்வுக்கான பயிற்சியை, ஆயத்தத்தை மேற்கொள்ளுதலுக்கு இணையானதே.

இந்த பூமியோடு மாத்திரம் நம் வாழ்வு முடிந்து போகாதாகையால், சக மனிதர்களோடு, சமாதானமாகவும், ஒற்றுமையாகவும் வாழ்வதெப்படி என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டியது முக்கியம். குழந்தைகள் மற்றவர்களோடு எப்படிப் பழகுவது, மற்றவர்கலிடம் எப்படி அன்பு செலுத்துவது, மரியாதை கொடுப்பது எங்ஙனம் என்பதைக் கற்றுக் கொள்ளும் பயிற்சி நிலையில் உள்ளனர்.

வேதாகமத்தில் பலதரப்பட்ட குழந்தைகளை நாம் படிக்கலாம். காயீனும், ஆபேலும் முதல் சகோதரர்கள். தேவனைப் பிரியப்படுத்துவதில் காயீனின் வாஞ்சையைக் காட்டிலும், ஆபேலின் வாஞ்சை பெரிதானது. ஆவிக்குரிய தன்மையோடு நடப்பதில் ஆபேலுடைய முன்மாதிரியை, காயீன் பின்பற்றவில்லை. மாறாக அவன் மீது பொறாமையும், கோபமும் கொண்டான். ஒரு நாளில் அவனுடைய கோபம், தன் சகோதரனை கொலை செய்ய வைத்தது. (ஆதி 4 :1-8) அநேக சமயங்களில், தங்கள் பிள்ளைகளின் கோபம், பொறாமை போன்றவற்றை, பெற்றோர்கள் சகித்துக் கொள்கின்றனர். அதற்கு அவர்கள் கூறும் நொண்டிச் சாக்கு "அவர்கள் சிறுபிள்ளைகள் தானே, போகப் போகச் சரியாகிவிடும்" என்று. ஆனால் உணர்வுகளை கட்டுப் படுத்தலைக் குறித்தும், சகோதர, சகோதரிகள் ஒருவருக்கொருவர் அன்பாய் இருப்பதை தேவன் எதிர்பார்க்கிறார் என்பதையும் நாம் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இஸ்ரவேலும், ஈசாக்கும், ஒரே தகப்பனுக்கு, ஆனால் வெவ்வேறு தாய்க்குப் பிறந்த சகோதரர்கள். இப்படிப் பட்டதான கலப்புகள், குடும்பங்களில் பெரிய பிரச்சனைகளையும், கடுமையான விளைவுகளையும் ஏற்படுத்தும். இங்கே, இஸ்மவேல் தன் சகோதரனைக் கேலி செய்து, சிரிக்கிறான். ஆனால் ஈசாக்கின் தாய், தன் மகன் இவ்விதமாக நடத்தப் படுவதைப் பொறுக்காமல், இஸ்மவேலையும் அவன் தாயையும் வெளியேற்றும்படி

ஆபிரகாமை வற்புறுத்துகிறாள். (ஆதி 21 : 8 - 10). குடும்பங்களில் ஒரு குழந்தை, அடிக்கடி, மற்றொருவனைக் கேலி செய்து வஞ்சகமான முறையில் சண்டையைத் தூண்டி, வெளியில் நல்லவனைப் போல நடிக்கும் போது பெற்றோர் களுக்கு உள்ளே என்ன நடக்கிறது என்பதை சரியாகப் புரிந்து கொள்ள முடியாது. சில சமயங்களில் பெற்றோர்கள் ஒரு கத்துக் கத்திவிட்டு, அத்தோடு தங்கள் கடமை முடிந்தது என்று எண்ணுகின்றனர். ஆனால், குடும்பத்தில் உள்ள ஒரு குழந்தை (பையன்) மற்றொருவனுக்கு, பெற்றோரின் மறைவில் இருந்து கொண்டே உபத்திரவம் செய்வது, கண்டுபிடிக்கப்பட்டு, திருத்தப்பட வேண்டும். இது மிக முக்கியம்.

யாக்கோபும், ஏசாவும் இரட்டையர்கள். ஈசாக்கு ஏசாவையும், ரெபேக்காள் யாக்கோபையும் நேசித்தனர். இது குடும்பங்களில் வரும் வேறொரு பிரச்சனை. இது குடும்பங்களில் அழிவை ஏற்படுத்தும். பெற்றோர்கள் இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். (எபே : 6 : 8; நீதி : 28 : 21). இங்கே ஏரவஞ்சனை, ஏமாற்றுக்கும் (ஆதி 27:5-29) பொய்க்கும் வழிவகுத்தது. இது சகோதரர்களுக்குள்ளே கடுமையான விரோதத்தை ஏற்படுத்தியது. ஏசா தன் சகோதரனைக் கொல்ல தீர்மானிக்கிறான். அதன் விளைவு யாக்கோபு வீட்டை விட்டு ஓடுகிறான் (வ. 41). இந்தப் பிரச்சனை அவர்கள் ஆளான பிறகுதான் வந்தது என்றாலும், அதற்குண்டான அடித்தளம் அவர்கள் இளமையில் இருக்கும் பொழுதே ஆரம்பித்துவிட்டது. எல்லாக் குழந்தைகளையும், ஒரு சேர நேசிக்காமல் பாரபட்சம் காட்டுவது எவ்வளவு துக்கரமானது பாருங்கள். பாரபட்சம் காட்டுவது, குடும்பங்கலில் அழிவைக் கொண்டு வருமாதலால், வேதாகமம் அதைக் கண்டிக்கிறது என்பதை முதலில் பெற்றோர்கள் உணரவேண்டும்.

ஏரவஞ்சனை, ஏமாற்றுக்கும், பொய்க்கும், வெறுப்புக்கும், கோபத்திற்கும், கொலைக்கும் வழிநடத்தினது. இப்படிப்பட்ட எல்லா குணங்களும், இளம் வயதிலேயே கண்டுபிடிக்கப் பட்டு சரி செய்யப்பட வேண்டும். இல்லாவிடில் இவைகள் வாழ்க்கைப் பழக்கமாகிவிடும்.

குழந்தைகள், குழந்தைகளாக இருந்தாலும், பெற்றோர்கள் போதித்து, அவ்வப்பொழுது ஒழுங்குபடுத்தினால், அவர்களை மோசமான பழக்கங்களிலிருந்து விடுவிக்கலாம்.

பெற்றோர்கள் ஜாக்கிரதை யாயிருந்து, கவனிக்க வேண்டிய சில பழக்க வழக்கங்கள்.

- தன்னலம், தன்னுடையதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் விருப்பமில்லா மை,
- தனக்குத் தேவையானது கிடைக்காத போது செய்யும் முரட்டுப் பிடிவாதம்
- மற்ற குழந்தையின் செயல் பாட்டால் ஊளையிட்டு அழுவது
- சகோதர, சகோதரிகளோடு, மற்றும் குடும்பத்திற்கு புதிதாக வருபவர்களுடன் சண்டை யிடுவது.
- பொய் பேசுதல்
- மற்ற குழந்தையை சிக்கலில் மாட்டிவைக்க இவன் செய்யும் ஏமாற்றுத்தனம்.
- பேராசை

ஒரு குழந்தை, வளர்ந்து பெரியவனாகும் போது, வெளி உலகத்தில் சமாதானத்தோடும், திருப்தியோடும் எவ்வாறு வாழ்வ தென்பதை, சிறு பருவத்தில் சகோதர, சகோதரிகளோடு 'வளரும்பொழுது' கற்றுக்கொள்ள முடியும். பெற்றோர்கள் மேற்க் கூறிய குணங்களை கற்றுக் கொள்வதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இவைகள் சரிசெய்யப்படவில்லையென் றால் சகோதர, சகோதரிகளுக் குள் மோசமான உணர்வுகளும், பிரச்சனைகளும்தான் மிஞ்சும் என்பதைச் சொல்லவும் வேண்டு மோ?

இதை வாசிக்கும் அன்புப் பெற்றோர்களே! பிள்ளைகளை கிறிஸ்துவுக்குள் வளர்ப்பதில் நாம் ஆற்ற வேண்டிய வேலை களைப் பற்றி வேதத்தின் துணை கொண்டு பார்த்தோம். மிகவும் ஜாக்கிரதையாக இவைகளை கைக்கொள்வோம். இல்லையேல், பிள்ளைகளைப் பெற்றதினால் ஏற்படப் போகும் பெருமை களைக் காட்டிலும், சிறுமை யையும், அவமானத்தையும் அடைவோம் என்பது உறுதி.

கர்த்தர் தாமே வெற்றியுள்ள கிறிஸ்தவ குடும்பத்தைக் கட்ட நமக்கு உதவி செய்வாராக!

ஊக்கமாக ஜெபிப்போம்!! வாழ்ந்து காட்டுவோம்!!!

ரேச்சல் ராஜநாயகம்
பெட்டி பர்ட்டன் சோட்.

# "ஆகிலும், உன் பேரில் எனக்குக் குறை உண்டு"

தியத்திரா சபைக்கு கர்த்தர் அறிவுரை ஆற்றிய போது, "கிரியை, ஊழியம், விசுவாசம், பொறுமை "ஆகிய நற்பண்புகளில் வளர்ந்திருந்த ஒரு சபையாக அதைக் கண்டார் (வெளி. 2: 19). சாத்தானின் பலத்த எதிர்ப்புகளை எல்லாம் சந்தித்து, அவர்கள் இந்த நற்குணங்களை வளர்த்திருந்தனர். அந்நாட்களில், பெரிய சபைகளில் ஒன்றாக அவர்கள் செயல்பட்டார்கள் என கணிக்கலாம். ஒரு அளவுக்கு இது சரியாக இருந்திருக்கும்.

என்றபோதிலும், தியத்திராவின் அன்றைய நிலையைப் பற்றி கர்த்தர் முற்றிலுமாகப் பிரியப்படவில்லை என்பதை நாம் காண்கிறோம். "ஆகிலும் உன் பேரில் எனக்குக் குறை உண்டு" பிரட்சனை என்னவெனில் : "தன்னைத் தீர்க்கதரிசி என்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம் பண்ணவும் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய்!!

பிரசிச்னை என்ன? சபையில் ஒரு பெண் தவறாகப் போதித்துக் கொண்டிருந்தாள். சபை அதற்கு இடங்கொடுத்துக் கொண்டிருந்தது. அவளுடைய கள்ளப் போதனைக்கு அவர்கள் இடங் கொடுத்ததின் விளைவாக, மக்கள் பாவ வாழ்க்கையில் தள்ளப்பட்டனர். கள்ளப் போதனைக்கு நாம் இடம் கொடுத்தால், இன்றும் அதே காரியம் நடைபெறும், மக்கள் பாவபடுகுழிக்குள் வீழ்ந்து போவர். தவறைப் புறக்கணிப்பது எனக்கு எளிதாகத் தோன்றுகிறது. ஒரு சபையில் நடைபெறும் நல்ல காரியங்களைப் பற்றி நான் நினைக்க விரும்புகிறேன். நற்காரியங்கள் பற்றியே பிரசங்கிக்கவும் விரும்புகிறேன்.

"கிரியை, ஊழியம், விசுவாசம், பொறுமை" ஆகிய பண்புகளில் நாம் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து முன்னேறிக் கொண்டிருக்கும்

போது, தவறுகளைப் பற்றி நாம் பேச விரும்புவதில்லை- அல்லது எதிர்மறையில் சிந்திப்பவன் என நமக்கு பட்டம் சூட்டிவிடுவார்களே!

இந்த இடத்தில் தான் நான் நின்று, நிதானமாக, தவறுக்கு இடமளிப்பதின் விளைவுகள் என்ன என்பதைக் காண வேண்டியவனாக இருக்கிறேன். தியத்திராவில் யேசபேல் என்ற பெண், பரிசுத்தவான்களை வேசித்தனம் பண்ணவும் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் போதித்து அவர்களை வஞ்சித்தாள். அச்செயல்களில் அவள் வெற்றி பெற்றாள். ஏனெனில் அவளுக்கு இடங் கொடுக்கப்பட்டது. எந்தத் தவறையும் நாம் புறக்கணிப்போமானால், நாம் சம்பாதித்த பிற நற்பண்புகளின் பயன் யாவும் அழிந்து போய்விடுகிறது. ஏனென்றால், மக்கள் பாவத்தில் வீழ்ந்து போகின்றனர். இன்றைய சபைக்கு இது ஒரு பாடமாக அமைகிறது!

நாம் மனிதரைப் பிடிக்கும் செம்படவர்கள். ஏரியில் நான் மீன் பிடிக்கச் செல்லும் போது, அங்கே பாம்புகளைத் தேடி நான் அலைவதில்லை. ஒருவேளை, ஒரு பாம்பு எப்படியோ படகிற்குள் நுளைந்து விட்டால், அதை நான் கொன்று விடுகிறேன். ஏனெனில் படகிலுள்ள மக்களின் உயிருக்கு பாம்பு ஆபத்தை விளைவிக்கும். நம்மைச் சுற்றிலும் தவறுகளைக் கண்டு பிடித்துக் கொண்டு நாம் அலைவதில்லை. அதேவேளையில், தவறு போதிக்கப்படும் போது அதை நாம் எதிர்க்கிறோம். ஏனெனில் படகிலுள்ளவர்களை அது வீழ்த்திப் போகும்.

தவறு தன் தலையை சபைக்குள் நீட்டும் போது, உடனே அதைத் துண்டித்து எரியும் சக்தியை தேவன் நமக்குத் தருவராக! தவறை எதிர்த்துக் கொண்டிருப்பது மாத்திரமே கிறிஸ்தவ வளர்ச்சிப் பணி அல்ல என்று அறிந்து கொள்ளும் ஞானத்தை அவர் நமக்கு அளிப்பாராக!

"கிரியை, ஊழியம், விசுவாசம், பொறுமை" ஆகிய நற்பண்புகளில் வளர வேண்டிய அவசியமும் நமக்கு உண்டு.

**RON HARPER** — எஸ்.எஸ். ராஜன்

# சபையைப் பற்றிய சில கேள்விகள்

நான் கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினராக இருப்பதாலும், அது மற்ற எல்லா சபைகளிலிருந்தும் வித்தியாசப்படுவதாலும், அடிக்கடி பலர் என்னிடம் அது பற்றி நிறைய கேள்விகள் கேட்கின்றனர். இதோ அவற்றில் சில கேள்விகளும், அவற்றிற்கான பதில்களும் :

**1. உங்கள் சபையை ஏற்படுத்தியது யார்?**

முதலில் நான் சொல்ல வேண்டியது என்னவென்றால், என்னுடைய சபை என ஒன்று இல்லை. என்னுடைய சபையாக இருப்பின் அது காசு பெறாது. ஆனால், நான் அங்கத்தினராக இருக்கும் சபையை கிறிஸ்து ஏற்படுத்தினார். ". . . என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை", (மத். 16 : 18), என அவர் கூறினார்.

**2. கிறிஸ்துவின் சபை தொடங்கிய இடம் எது?**

லூக்கா 24 : 46- 49வசனங்களின் படியும், அப். நடபடி 1,2 அதிகாரங்களின் படியும் அது எருசலேம் நகரில் தொடங்கிற்று.

**3. அது எப்போது தொடங்கியது?**

அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ம் அதிகாரம் சபை நிறுவப்பட்டதைப் பற்றிக் கூறுகிறது. கர்த்தரின் சிலுவை மரணத்தைக் கடந்து 50 நாட்கள் சென்றபின் வந்த முதல் பெந்தெகொஸ்தே என்னும் நாளிலே அது தொடங்கியது. ஏறக்குறைய கி.பி. 33ல், அதாவது கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்தது.

**4. இது ஒரு பிரிவினை சபையா?**

இல்லை. இது ஒரு பிரிவினை சபையல்ல. ஏனெனில் கிறிஸ்து ஒரு பிரிவினை சபையை உண்டாக்கவில்லை. அல்லது இது கத்தோலிக்க மதமோ, புராட்டஸ்ண்ட மதமோ அல்ல. அப்படியானால் இது என்ன? கிறிஸ்து ஏற்படுத்திய சபை, கிறிஸ்துவின் சரீரம். (மத். 16 : 18; எபே. 1 : 22, 23). ஒரே சபை (எபே. 4 : 4).

5. **இந்த சபையின் தலைவர் யார்?**

கர்த்தரின் சபை எந்த மனிதனையும் தலைவனாக அங்கீகரிக்கவில்லை. மாறாக, கிறிஸ்துவே சபையின் தலைவர். "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்". (கொலோ. 1 : 18).

6. **இதன் தலைமையகம் எங்கே?**

மீண்டுமாக, இந்த உலகத்தில் சபைக்குத் தலைமையிடம் இல்லை, கிறிஸ்து அதன் தலைவர், அவர் பரலோகத்தில் இருக்கிறார். எனவே தலைமையகம் பற்றி நாம் நினைத்தால், பரலோகம் என்பதே அதற்குப் பதில். தலைவர் வாழும் இடத்தில் தான் எப்போதும் தலைமையகம் இருக்கும்; கிறிஸ்து பரலோகத்தில் இருக்கிறார்.

7. **சபை முக்கியமா?**

சபைக்காக கிறிஸ்து மரணத்தையே ஏற்றுக் கொள்ள விரும்பின அளவிற்கு மிக முக்கியமே. (எபே. 5:25). மீண்டும், கிறிஸ்துவின் இரத்தத்தால் சபை கிரையங் கொள்ளப்பட்டது என நாம் படிக்கிறோம். (அப். 20 : 28). இப்படிப்பட்ட ஒரு விலை அதற்குத் தேவையானால் நிச்சயமாக அது முக்கியம் தான்.

8. **ஒருவன் இரட்சிப்படைய கிறிஸ்துவின் சபையில் உறுப்பினராக இருக்க வேண்டுமா?**

வேதாகமம் என்ன சொல்லுகிறது என்று பார்க்கலாம். எபேசியர் 5 :23ல், சபை அல்லது சரீரத்தின் இரட்சகராக கிறிஸ்து இருக்கிறார் என சொல்லப்பட்டுள்ளது. சபையின் இரட்சகராக அவர் இருந்தால், ஒருவன் இரட்சிக்கப்பட சபையில் இருக்க வேண்டும் என்று அர்த்தம் அல்லவா? யார் சொன்னது?

அப்போஸ்தலர் பவுல் வழியாக கர்த்தர் சொன்னார். பின்னர், அப். 2 :47ல் இரட்சிக்கப்பட்டவர்கள் சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என படிக்கிறோம். எனவே ஒருவன் இரட்சிக்கப்பட்டால், சபையின் ஒரு அங்கமாகிறான். அவன் சபையில் இல்லாவிட்டால் அவன் இரட்சிக்கப்படவில்லை.

ஏனென்றால், அவன் இரட்சிக்கப்பட்டிருந்தால், சபையில் இருப்பான். எளிது.

**9. சபை இரட்சிக்கிறது?**

இரட்சிப்பது சபை அல்ல, கிறிஸ்துவே இரட்சிப்பவர். (எபே. 5:23) ஆனால் இரட்சிக்கப்பட, ஒருவன் சபையில் இருக்க வேண்டும்.

**10. சபையின் பெயர் முக்கியமா?**

இல்லாவிட்டால், இரட்சிப்பு கிறிஸ்துவின் பெயரில் உள்ளது என சுவிஷேம் கூறுவது ஏன்? (அப். 4 : 12) ரோமர் 16 : 16 பிற வசனங்களிலும், சபையானது கிறிஸ்துவின் சபை என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அதாவது அது கிறிஸ்துவுக்கே சொந்தம் என்று அர்த்தம். கிறிஸ்துவின் நாமத்தை நாம் தரித்துக் கொள்ளாவிட்டால், கிறிஸ்துவின் சபை என்று நாம் எப்படி உரிமை கொண்டாட முடியும்?

**11. எத்தனை சபைகள் உள்ளன?**

வேதாகமத்தில் நாம் ஒரே ஒரு சபையைப் பற்றி மட்டுமே படிக்கிறோம். (மத். 16 : 18; எபே 4 : 4) பல பிராந்திய சபைகளைப் பற்றி நாம் படித்தாலும், ஆனால் சபை ஒன்றே.

**12. அதில் அங்கத்தினராக ஒருவர் என்ன செய்ய வேண்டும்?**

சத்தியத்தைக் கேட்க வேண்டும். (ரோமர் 10 : 17); விசுவாசிக்க வேண்டும் (எபி. 11 : 6); அவர்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் (அப். 17 : 30); கிறிஸ்துவை அறிக்கை செய்ய வேண்டும் (ரோமர் 10 : 10); இரட்சிக்கப்பட திருமுழுக்குப் பெற வேண்டும் (மாற்கு 16 : 16; அப். 2 : 38). பின்னர், ஒருவன் இரட்சிக்கப்பட்டால், கர்த்தர் அவனை சபையில் சேர்க்கிறார். (அப். 2 : 47).

சபையைப் பற்றி இன்னும் பல கேள்விகளை பலர் கேட்டிருக்கின்றனர். என்றபோதிலும், குறிப்பிட்ட கேள்விகளுக்கு இங்கு சுவிசேஷத்தின் அடிப்படையில் தரப்பட்டுள்ள விடைகள் உங்களுக்கு பயன் அளிப்பதாக இருக்கும் என நம்புகிறேன். அவ்வாறே ஜெபிக்கிறேன்.

EZSR J.C. சோட்

# கலப்பட கிறிஸ்தவம்

கலப்பட உணவு என்றால் நாம் அனைவரும் அறிவோம். சுத்தமற்ற ஒரு பொருள் உணவோடு கலக்கப்பட்டதும் அது கலப்பட உணவாக மாறுகிறது. உதாரணமாக, பாலுடன் தண்ணீர், அரிசியுடன் கல், கடலைப் புண்ணாக்கோடு மரத்தூள், இன்னும் இது போன்ற எத்தனையோ. இவை அனைத்தும் கலப்படம் அல்லது சுத்தமற்றவை எனக் கருதப்படுகின்றன. இவ்வாறு உணவுப் பொருட்களில் கலப்படம் செய்பவர்கள் லாபத்திற்காக அதைச் செய்கின்றனர். அதை வாங்கி உண்பவர்கள், அது உண்மையான உணவுப் பொருள் என எண்ணி ஏமாறுகின்றனர். ஆனால் அது உண்மையற்ற கலப்படமான பொருளாக இருப்பதால், உடல் நலம் கெட்டு, சில வேளைகளில் மரணத்தைக் கூட ஏற்படுத்துகிறது.

அநேகமாக, உணவுப் பொருட்கள் கலப்படமாகவே கிடைப்பது போல, கிறிஸ்தவமும் கலப்படமாகி விட்டிருக்கிறது. கிறிஸ்தவம் என்று காட்டும் அளவிற்கு கொஞ்சம் உண்மையும், மீதி பெரும் பகுதி போலியாகவும் இருக்கிறதை பார்க்க முடிகிறது. அதை கலப்படமாக்குவது எது? மனித அபிப்பிராயங்கள், உபதேசங்கள், பெயர்கள் ஆகியவற்றை வேதாகமம் போதிப்பதோடு கலந்து விடுவது தான் கிறிஸ்தவத்தை கலப்படமாக்குகிறது. அதை உண்மை என்று ஏற்றுக் கொள்வோர் ஏமாற்றப்படுகின்றனர்; விளைவுகளை சந்தித்து துயரப்பட வேண்டியதிருக்கும்.

இப்போது, நீங்கள் எதைத் தேர்ந்தெடுப்பீர்கள்? சுத்தமான உணவையா? கலப்பட உணவையா? எதுவென்று உங்களுக்குத் தெரியும். பல காரணங்களுக்காக, சுத்தமான உணவையே நீங்கள் விரும்புவீர்கள். சரி, இப்போது கிறிஸ்தவம் என்று வரும் போது எதைத் தேர்ந்தெடுப்பீர்கள்? சுத்தமான கிறிஸ்தவத்தையா, அல்லது கலப்பட கிறிஸ்தவத்தையா? நீங்கள் சரியான மனநிலையில் இருப்பீர்களானால், சுத்தமான கிறிஸ்தவத்தையே விரும்புவீர்கள்.

சுத்தமான உணவுப் பொருட்களை அடைய ஒருவர் எங்கே செல்ல வேண்டும்? உண்மையான உணவுப் பொருட்கள் கிடைக்கும் இடத்திற்குச் செல்ல வேண்டும். பசுவிடத்திற்குச் சென்றால் சுத்தமான பால் உங்களுக்குக் கிடைக்கிறது. சுத்தமான அரிசி வேண்டுமானால், அது விளையும்

இடத்திற்கே செல்ல வேண்டும். இப்போது தவறும், தகராறும் எங்கே உற்பத்தியாகின்றன எனத் தெரிகிறதா? உணவு வேறு நபர்கள் (இடைத்தரகர்கள்) மூலமாக நமக்கு வரும் போது, பல வேளைகளில் அவர்கள் அதில் கலப்படம் செய்கிறார்கள், மாற்றுகிறார்கள், எதையாவது சேர்க்கிறார்கள், அதிலிருந்து சிலதை எடுத்துவிடுகிறார்கள், பதிலாக வேறு எதையாவது வைக்கின்றனர்; இப்படியாக கடைசியில் நமக்குக் கிடைப்பது கலப்பட உணவாகிப் போகிறது. எனவே, சுத்தமான உணவை பெற்றுக் கொள்ளுவதில் நீங்கள் உறுதியாக இருந்தால், ஒன்று அவ்வுணவுப் பொருள் கிடைக்கும் மூலஸ்தலத்திற்கே நீங்கள் செல்ல வேண்டும், அல்லது ஏமாந்து போகாத அளவிற்கு, அந்த உணவுப் பொருளைப் பற்றிய மிக துல்லியமான ஞானம் படைத்தவர்ராக நீங்கள் இருக்க வேண்டும்.

இந்த சோதனை கிறிஸ்தவத்திற்கும் பொருந்தும். கலப்படமற்ற கிறிஸ்தவம் உங்களுக்குத் தேவையானால், அதினுடைய மூலத்ஸ்தலத்திற்குச் செல்ல வேண்டும். அதாவது, நீங்கள் வேதாகமத்திற்குச் செல்ல வேண்டும். அதன் பின்னரே, அது உண்மையென்று நீங்கள் நிச்சயிக்க முடியும். ஆனால், ஒரு தடவை மனிதர்களின் கை வழியே அது வர ஆரம்பித்தால், அவர்கள் அதோடு சிலவற்றைச் சேர்க்கவோ, அல்லது அதிலிருந்து எடுக்கவோ, மாற்றவோ - செய்து இறுதியாக, ஆரம்பத் தில் இருந்ததிலிருந்து மிகவும் மாறுதலாகிப் போகிறது. இப்படிப்பட்ட கிறிஸ்தவத்தையே இன்று பல மக்கள் அறிவர். அவர்கள் காண்பதும், கேட்பதும் கலப்பட கிறிஸ்தவத்தையே என்பதையும், அது உண்மையும் சுத்தமானதும் அல்ல என்பதையும் அவர்கள் அறிய மாட்டார்கள். வேதாகமத்திற்குச் சென்றால் உண்மைக் கிறிஸ்த வத்தைக் காணமுடியும் என்ற உண்மையும், வேதாகமம் உபதேசிப்பதின்படி நடந்தால் சுத்தமான கிறிஸ்தவம் அவர் களில் தங்கும் என்பதும் பல மக்களுக்குத் தெரிவதில்லை.

உணவு கலப்படம் செய்யப்பட்டிருந்தாலும் இன்னும் அதற்கு உணவு என்று தான் பெயர். ஆனால் அது சுத்தமான உணவு அல்ல. அறியாத பல மக்களுக்கு அது கலப்பட உணவாகத் தெரியாது. சுத்தமான உணவிற்கும் கலப்பட உணவிற்கும் உள்ள வித்தியா சத்தை உண்மையிலேயே புரிந்து கொள்ளக் கூடியவர்கள் கண்டுபிடித்து விடுவார்கள். அதுபோலவே தான் கிறிஸ் தவமும், கலப்பட கிறிஸ்தவமும் உண்மைக் கிறிஸ்தவத்தைப் போலவே

தோற்றமளிக்கும். அப்படியே அது ஏற்றுக் கொள் ளவும் படலாம். ஆனால், வேதாகமம் என்ன போதிக்கிறது என்பது ஒருவர் அறிந்தால், ஒரு நொடியில் போலிக்கும், உண்மை கிறிஸ் தவத்திற்கும் உள்ள வித்தியா சத்தை அறிந்து கொள்வார்.

எனது நண்பர்களே! ஏமாந்து போகாதீர்கள். உங்கள் வேதாக மத்தைப் படியுங்கள், அது போதிப்பதைக் கற்றுக் கொள்ளுங்கள். சத்தியத்தை நீங்கள் ஒரு தடவை அறிந்து கொண்டால், கலப்பட கிறிஸ்த வத்திற்கும் உண்மைக் கிறிஸ்த வத்துக்கும் உள்ள வேறுபாட்டை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். உங்கள் சொந்த நலனுக்காகவே இது கூறப்படுகிறது. கலப்பட கிறிஸ்தவம் கர்த்தரின் பார்வை யில் கிறிஸ்தவமே அல்ல.

தேவன் நமக்கு உண்மை யான கிறிஸ்தவத்தை அளித் திருக்கிறார். நாம் அவரை பிரியப்படுத்த வேண்டுமானால், அதையே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நமது தேவனுக்கு முன்பாகவும், நம்மைச் சுற்றியுள் ளவர்களுக்கு முன்பாகவும், உண்மையான உள்ளத்தோடு (மத். 5:8) நாம் சத்திய மதத்தைக் கடைப் பிடித்து நடக்க வேண்டும். (யாக். 1 : 27). அப்படியானால் மட்டுமே, தேவன் பிரியப்பட்டு நம்மை ஏற்றுக் கொள்வார். கலப்படமும், சுத்தமற்றதும், தூய்மையற்றதும் தேவனிடத் திலிருந்து வருவ தில்லை. எனவே, அவை இவ் வுலகிலும், வரப்போகிற உலகி லும் அவரால் ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை.

**J.C. Choate**

எஸ்.எஸ். ராஜன்.

## நியாயப் பிரமாணத்தை மீறுதல்

"பாவஞ் செய்கிற எவனும் நியாயப் பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம்". (1 யோ. 3 : 4).

### தீர்வு என்ன?

"அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை. அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ் செய்கிறதில்லை; பாவஞ் செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவும் இல்லை". ( 1 யோவான். 3 : 5-6).

# யெகோவா சாட்சி (3)

## இரட்சிப்பின் வழிகளை முறைப்படி அறியாத கூட்டம் இவர்கள்

உலகிலேயே மிக, மிக முக்கியமானதும், வேதாகமத்தின் மைய நோக்கமும், "ஒருவன் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்" என்பதைக் காட்டுவது தான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வந்ததன் நோக்கமும் அதுவாகத்தான் வேதம் காட்டுகிறது. (மத் 1:21) 1 தீமோ 1:15-ல் 'பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது' என்று கூறப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து நித்திய ஜீவனைக் கொடுக்கிறார் என்பது உண்மைதான். சந்தோஷமான பின் வாழ்க்கையை அருளச் செய்வார் என்பதும் உண்மைதான். ஆனால் இந்த நித்திய ஜீவனையும், சந்தோஷமான பின் வாழ்க்கையும் பெறுவதற்கு தன்னை தகுதி ஆக்கிக்கொள்ள ஒருவன் என்ன செய்ய வேண்டும்? தனது கடந்த கால பாவத்திலிருந்து முற்றிலும் விடுபெற ஒருவன் என்ன செய்ய வேண்டும் என்கு இந்தக் கூட்டத்தாரிடம் கேட்டால் கிடைக்கும் பதில் குளறுபடியே. கடந்த 6.4.93-ல் இவர்களில் சிலரிடம்,'நான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்' என்று கேட்கப்போய் அவர்களின் பதிலால் இதுவரை எனக்கு தலைச்சுற்று நிற்கவில்லை.

'நான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்? (அப். 16:30) என்று நியூயார்க்கில் உள்ள காவல் கோபுர அலுவலகத்திற்கு (யெகோவா சாட்சியினரின் தலைமையகம்) எழுதிக் கேட்ட ஒரு சகோதரருக்கு 1.12.67-ல் அவர்களால் எழுதி அனுப்பப்பட்ட பதிலைப் பாருங்கள். தேவனுடைய வசனம் தெளிவான தொரு பதிலைக் கொண்டிருக்க இவர்கள் எங்கெல்லாம் சுற்றுகிறார்கள் என்பதை காணுங்கள்'ஒன்றான மெய்த் தேவனையும், அவர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்' என்று எழுதியுள்ளனர், (யோவான் 17:3) இரட்சிப்பின் படிகளில் முதலாவது ஒருவன் தேவனுடைய வசனத்தை கற்க வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் தேவனுடைய வசனத்தை கற்பது மட்டும் ஒருவனுக்கு இரட்சிப்பைக் கொடுத்து விடாது. ஒரு உணவு விடுதிக்குப் போய் அவ்விடுதியில் என்னென்ன உணவு வகைகள் உள்ளன என்பதை அறிந்து கொள்வதால் மட்டுமே ஒருவன் பசியாறிவிடமுடியாது எனவே இவர்கள் கூறும் யெகோவாவைப் பற்றி அறிந்து கொண்டால் மட்டும் இரட்சிப்படைய முடியும் என்பது கள்ள உபதேசம்.

அவர்களின் 2-வது பதில், 'தேவனையும், குமாரனையும் அறிந்த பிறகு பிற கிறிஸ்தவர்களுடன் சபை ஆராதனையில் ஒழுங்காக கலந்து கொண்டு உறுப்பினராக (அங்கத்தினராக) வேண்டும். (யோவா 4:23, 1 சாமு 15:22) இவர்களின் இந்தக் கூற்று குதிரைக்கு முன்னால் வண்டியை கட்டி ஓட்டுவதற்கு ஒப்பாகும்? கிறிஸ்தவன் தவறாது சபை ஆராதனையில் கலந்து கொள்ள வேண்டும் என்று வேதம் கூறுவது உண்மைதான். இது, இரட்சிக்கப்பட ஒருவன் தனது நிலையை காத்து கொள்வதற்காகவே சபை ஆராதனையில் கலந்து கொள்கிறா னேயன்றி, 'சபை ஆராதனையில் கலந்து கொள்ளுதலே இரட்சிப்பு' என்பதோ அல்லது உறுப்பினராகு தலோ (அங்கத்தினராகுதலோ) அல்ல.

அவர்களின் மூன்றாவது பதில், ஒருவன் இரட்சிப்படைய, மறுரூபமடைய (புது சிருஷ்டியாக) வேண்டும் (ரோமர் 12:2, 2 கொரி

4:4) மீண்டும் குதிரைக்கு முன்பாக வண்டியா? இரட்சிக்கப்படுவதற்காக நாம் மறுரூபமடைவது இல்லை. மாறாக, நாம் இரட்சிக்கப்பட்டதினாலேயே மறுரூபமடைய முடியும். இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் அவன் புதிய சிருஷ்டியாகிறான். பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின' (2 கொரி 5:17) என்று வேதம் கூறுகிறது. ஒருவன் புது சிருஷ்டியாக மாறிய பிறகே இரட்சிக்கப்பட முடியும் என்பது வேதத்திற்கு முரணானது ஏனெனில் ஞானஸ்நானத்திலே (முழுக்குதலில்) தான் ஒருவன் இரட்சிக்கப்படுகிறான் என்பதையும் அதே ஞானஸ்நானத்திலேதான் ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளாகிறான் என்பதையும் வேதம் வெட்ட வெளிச்சமாக்கிக் காட்டுகிறது. மாற்கு 16:15-16, கலா 3:27 மேலும் இந்த முறைப்படி கிறிஸ்துவை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று கிறிஸ்துவே கூறினார். (யோவான் 5:24)

அவர்களின் நான்காவது பதில் 'சத்திய வசனத்தை போதிப்பதிலும் பிரசங்கிப்பதிலும் பங்கேற்றால் ஒருவன் இரட்சிப்படைவான் என்கின்றனர். நிச்சியமாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் பிறருக்கு போதிக்க கடமைப்பட்டவனே. (2 தீமோ 2:2) ஆனால் இதுவும் ஒருவன் இரட்சிக்கப்பட்ட பிறகு செயல்படுத்த வேண்டிய செயல், இவர்களின் இப்படிப்பட்ட கூற்றுகளுக்காகத்தான் மத். 7:21,23-ல் கிறிஸ்து பரலோகத்திலிருக்கிற என் பிதாவன் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை என்றும், தாங்கள் செய்கிற அநேக காரியங்களைக் குறித்து பெருமையோடு பேசும்போது,'நான் ஒருபோதும் உங்களை அறியவில்லை' என்றும் கூறியிருக்கிறாரோ? அப்படியானால் இங்கு கிறிஸ்து கூறியிருக்கும் "பிதாவின் சித்தம்" என்பது என்ன? 1. தீமோ 2:4-ல் எல்லா மனுசரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது அவரது முதலாவது சித்தம். "சத்தியத்தை அறிகிற அறிவை அடைய வேண்டும்" என்பது அவருடைய அடுத்தசித்தம் இப்படியிருக்க முறையான இரட்சிப்பை பெறாமலேயே யெகோவா சாட்சியினர் சத்தியத்தை போதித்துக் கொண்டிருப்பதாக கூறித் திரிவது வேதனைக்குரியது அருமை வாசகரே சிந்தியுங்கள்.

யெகோவா சாட்சியினர் இரட்சிப்பிற்கு என்ன வழி என்பதற்காக கூறும் மற்றொரு கருத்து "நீங்கள் உங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும்," (ரோமர் 12:1,2) இவ்வசனத்தில் ஒருவன் தன்னை ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று கூறியிருப்பது உண்மைதான். "அப்படியிருக்க, சகோதரரே நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன் இதுவே நீங்கள் செய்யத்தக்க" புத்தியுள்ள ஆராதனை என்று எழுதியிருக்கிறார். ஆனால் இது ஒரு பாவி தனது கடந்த கால பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவதையா கூறுகிறார்? அலலது இரட்சிக்கப்பட்ட ஒருவன் வாழ வேண்டிய கிறிஸ்தவ வாழ்க்கையை, ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்த வாழ்க்கையை வாழ வழிகாட்டுகிறார்.

இரட்சிக்கப்பட்ட இவர்கள் கூறும் ஆறாவது பிரதிபலனே இரட்சிப்பு என்பது தேவனால் நமக்கு அருளப்படும் பரதிபலனே 'இரட்சிப்பு என்பது ஒரு போதும் நமக்கு அளிக்கப்படும் பிரதிபலன் என்று வேதம் காட்டுவதில்லை. ரோமர் 5:11, 21-ஐ கவனமாக வாசியுங்கள். இரட்சிப்பு தேவனால் அருளியச்செய்யப்பட்ட 'இலவசஈவு' இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கையை நாம் வாழும் போது நமக்கு கிடைக்கும்

பிரதிபலனே "நித்திய ஜீவன்" என்றும் "ஜீவ கிரீடம்" என்றும் "பரலோக வாசம்" என்றும், "நித்திய இரட்சிப்பு" என்றும் வேதம் காட்டுகிறது. எனவே "இரட்சிப்பு" என்பது சில மூல உபதேசத்திற்கு கீழ்படிய வேண்டியதன் நிபந்தனைகளை உள்ளடக்கிய இலவச ஈவு தானேயன்றி பிரதிபலன் அல்ல. பிரதிபலன் என்பது தான் செய்த ஒரு கிரியைக்கு பிரதியாக கொடுப்பது (எபே. 2:8,9) அல்லது சம்பாதிப்பது. ஆனால் இரட்சிப்பு சம்பாதித்துக் கொள்வதல்ல.

அவர்களின் முடிவு கருத்து, "முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான்," (மத். 10:22) இதே கருத்தை மத். 24 : 13லும் கிறிஸ்து கூறியிருக்கிறார். 'மேற்குறித்த இரு வசனங்களிலுமே முன்னும் பின்னும் வாசித்துப் பார்த்தால், கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒருவனுக்கு வரும் உபத்திரவத்தினால்,"முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிககப்படுவான்" என்று கிறிஸ்து கூறுகிறார். இவ்வசன பகுதி முற்றிலும் தவறாக இவர்களால் பயன்படுத்தப்படுகிறது பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட ஒருவன் என்ன செய்ய வேண்டும் என்று வேதம் மிகத் தெளிவான, ஆணித்தரமான கருத்துக்களை கூறியிருக்கும் போது, தெளிவான அதை இவர்கள் காண இயலவில்லை. தாங்களும் குழம்பிப் போய் பிறரையும் குழப்பித் திரிகின்றனர். சுருங்கச் சொல்லின் மேற்குறித்த இவர்களது 7 கருத்துக்களுமே ஏற்கனவே இரட்சிக்கப்பட்ட ஒருவனது கிறிஸ்தவ ஜீவியத்திற்கு உரியவைகளேயன்றி, கடந்த கால பாவத்திலிருந்து, இரட்சிக்கப்படுவதற்கு உரிய வழிகளல்ல. இவர்கள் தங்களைத் தெளிவாக்கிக் கொள்ள அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை நிதானமாக பகுத்து படிக்க வேண்டுகிறேன்.

**கடந்த கால பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட வேதம் காட்டும் எளிய தெளிவான வழி.**

1. சத்தியத்தை அறிய வேண்டும். 'சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்' (யோவான் 8:32)

2. விசுவாசிக்க வேண்டும். 'நானே அவர் என்று விசுவாசியாவிட்டால்' உங்கள் பாவங்களிலே சாவீர்கள்' என்று கிறிஸ்து கூறினார். யோவான் 8:24 (யோவான் 8:18, 24-ஐ வாசிக்கவும்

3. மனந்திரும்ப வேண்டும். 'அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்' என்றும் கிறிஸ்து கூறினார். (லூக்கா 13:3,5)

4. கிறிஸ்துவை அறிக்கை செய்ய வேண்டும். 'மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்' என்றும் கிறிஸ்து கூறினார். (மத். 10:32) மேலும் 10:33-யும் அப் 8:35-38-யும் ரோமர் 10:9-10-யும் வாசிக்கவும்.

5. ஞானஸ்நானம் பெற வேண்டும், விசுவாசுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிகப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று இயேசு கூறினார். (மாற்கு 16:16)

Bro. E.A. ஆறுமுகம், திண்டுக்கல்.

# இதோ, ஒரு நற்செய்தி போதகர்!

எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு நற்செய்தி போதகர் ஒரு எளிமையான கிறிஸ்தவர். பட்டங்களோ, தனிமைப்படுத்திக் காட்டும் ஆடைகளோ அவருக்குக் கிடையாது. பிற கிறிஸ்தவர்களைப் போலவே அதே மாதிரியான பல போராட்டங்களை அவரும் சாத்தானோடு நடத்திக் கொண்டு தான் வருகிறார். ஞாயிற்றுக்கிழமை அவரும் சுகவீனமாகிப் போகிறார். புதன்கிழமை மாலை, சோர்வுற்றுப் போவோரில் அவரையும் காணமுடிகிறது. தேவைப்படும் போது, நோயாளிகளையும் கூட அவர் சந்திக்கிறார்.

ஒரு போதகர் தேவனுடைய வசனத்தை அறிவிப்பவராகவும் இருக்கிறார். இயேசுவும் அவரது அன்பும் என்ற மிக மிகப் பழைய கதையை அவர் சொல்லிக் கொண்டிருக்கிறார். பலருக்கு பழைய கந்தலாகிப் போன கதையாகத்தான் அது காட்சி தருகிறது. ஆனால் அவருக்கோ பாலைவனத்திலே பெய்யும் மழையைப் போல அவ்வளவு புதிதாகத் தெரிகிறது. மனிதர்களுடைய இதயங்களிலே தேவனுடைய வசனத்தை விதைக்க அவர் ஆர்வமாக அலைகிறார்: எதை, எப்படிப் போதிக்க வேண்டும் என்பதில் அவர் மிகவும் கவனமாக இருக்கிறார். அபூர்வமாக, ரெம்பவும் புல்லரிக்கச் செய்யும் காரியத்தையும் அவர் காணமுடிகிறது - விதை செடியாகி, கனி கொடுக்கிறது!

நற்செய்தி போதகர் சகோதரர்களை உற்சாகப்படுத்துகிறார். நித்திய ஜீவனுக்கு வழிநடத்தும் நேரானதும், குறுகியதுமான பாதையை அவர்களுக்குக் காட்ட அவர் முயற்சிக்கிறார். வழியிலே, பலரை அவர் ஊக்கப்படுத்துகிறார்; ஏன், சிலரை நெருப்பிலிருந்து கூட வெளியில் அவர் கொண்டு வரக்கூடும். இவ்வாறு செய்வதால், தானும் உற்சாகமடைந்து, பிறருக்கும் ஊக்கமளிக்க, தொடர்ந்து அவர் நலமான தேவனுடைய வசனத்திற்குத் திரும்பி வருகிறார்.

ஒரு போதகர் சத்தியத்தின் பாதுகாவலனாக இருக்கிறார். சில சமயங்களில், வெல்வெட் கையுறைக்குள் இரும்புக் கரங்களை உடையவராக அவர் இருக்க வேண்டும். எரேமியா தீர்க்கதரிசியைப் போன்று, தனது மக்களின் பாதுகாப்புச் சுவராக அவர் இருக்க வேண்டும். அநேகமாக, இது ஒரு தனிப்பட்ட பணியாக இருக்கக்கூடும்; என்றாலும், அவர் ஒரு போதும் தனியாக இல்லை என்பதை அவர் உணர வேண்டும்.

கள்ளப் போதகர்களையும், போதகங்களையும் கண்டிக்கிறவராக ஒரு போதகர் இருக்க வேண்டும். குழப்பத்தை விதைக்கிறவர்களை, சுவிசேஷத்தின் வல்லமையோடு, தனது உறுதியான இனிய பேச்சால் அவர் தடுக்கிறார். நிறைய படிப்பு, ஜெபம், பயத்தையும் ஆபத்தையும் மேற்கொள்ளும் ஆற்றல் ஆகிய அனைத்தும் அதற்குத் தேவை. ஆனால் அவரை இயேசு கைவிடுவதில்லை என்பதை அவர் அறிவார்.

நற்செய்தி போதகர் கனவுகளைக் கட்டுபவர். அவர் கரங்களிலும் இருதயத்திலும் வரைபடமும், திட்டமும் உள்ளன; கர்த்தரின் வசனங்கள் என்பதே அவை. கர்த்தர் திரும்பி வரும் போது, வெட்கப்படக் கூடிய ஊழியனாக இல்லாமல், அவர் அதைச் சரியாக பயன்படுத்த வேண்டும்.

ஒரு நற்செய்தி போதகர் தேவனுடைய வசனத்தின் மாணவன். தினமும் அதை அவர் கவனமாகப் படித்து, சில புதிய விஷயங்களை புரிந்து கொள்ள முயற்சிக்கிறார். வசனத்தால் அவர் தொடர்ந்து புதுப்பிக்கப்படுகிறார்.

ஒவ்வொரு பிரசங்கமும், வேதாகம வகுப்பும் உண்மையிலேயே அவை பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டவை என அவருக்கு அழுத்தமாக உணர்த்துகின்றன. மக்களின் வாழ்க்கையை உயிர்ப்பிக்கிறதை அவர் காண்கிறார். எவ்வளவு அதிகமாக அவர் கற்றுக் கொள்ளுகிறாரோ அவ்வளவுக்கு அவருடைய வாழ்க்கையின் காரணத்தைப் புரிந்து கொள்ளுகிறார். மனிதனிடத்தில் தேவனுடைய எதிர்பார்ப்பு எதுவோ, அதுவே அவருடையதாகவும் இருக்கிறது.

**Roelf Ruffaer** — எஸ்.எஸ். ராஜன்

## நமக்குப் பாவமில்லை என்போமானால் . . . ?

"நமக்குப் பாவமில்லை என்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது." (1 யோவான் 1 : 8).

## தீர்வு என்ன?

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்". (1 யோவான் 1 : 9).

# நான் சரியான சபையில் அங்கம் வகிப்பதை அறிவது எப்படி?

1. இயேசு கிறிஸ்து தமது ஒரே சபையைக் கட்டுவதாக வாக்களித்தார். (மத்தேயு 16 : 18).
2. பேதுருவுக்கும், பிற அப்போஸ்தலர்களுக்கும் இதை வாக்களித்தார். (மத். 16 : 18).
3. எந்த தமது சபைக்காக அவர் மரணத்தை சந்தித்தாரோ (அப். 20 : 28) அந்த சபையை பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்ளாது என அவர் வாக்களித்தார் (மத். 16 :18).
4. பாவங்கள் மன்னிக்கப்பட்டு, இரட்சிக்கப்பட இயேசுவின் நிபந்தனைகளை இவ்வுலகத்திற்கு அறிவிக்க, தமது அப்போஸ்தலர்களுக்கு அவர் அதிகாரம் அளித்தார். (மத். 28 : 18 -20; மாற்கு 16 : 15 - 16; லூா. 24 : 47).
5. இயேசு கட்டளையிட்டபடியே பேதுருவும் அவருடன் சேர்ந்த பிற அப்போஸ்தலர்களும் செய்தார்கள். ஒவ்வொருவரும் விசுவாசித்து, மனந்திரும்பி, திருமுழுக்குப் பெற வேண்டுமென அவர்கள் கேட்டுக் கொண்டனர். (அப். 2 : 36 - 38).
6. கீழ்ப்படிந்தவர்களை கர்த்தர் தமது சபையில் சேர்த்துக் கொண்டார். (அப். 2 : 47).
7. அப்போஸ்தலரும் பிறரும் சென்ற இடங்களெல்லாம் அதே செய்தியைப் போதித்தனர்; கீழ்ப்படிந்து விசுவாசித்தவர்களும் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.
8. அப்போஸ்தலர்களுடைய உபதேசத்திற்குக் கீழ்ப்படிந்தவர்கள், தேவனை ஆராதிக்க ஐக்கியமாக இணைந்தனர். (அப். 2: 42; யோ 4 : 24).
9. எங்கெல்லாம் கீழ்ப்படிந்த விசுவாசிகள் இந்தக் காரியத்திற்காகக் கூடி வருகின்றனரோ, அந்த இடங்களில் அவர்கள் அவருடைய சபை எனப்படுவர். உதாரணமாக, எருசலேம், (அப். 8 : 1).
10. இத்தகைய சபைகள் தேவனுடையவை (அப். 20 : 28); கிறிஸ்துவினுடையவை (ரோமர் 16 : 16) - வேறு எந்த சட்டப்படியான பெயரோ, விளக்கமோ கிடையாது.
11. அதே அப்போஸ்தலர்களுடைய உபதேசம், ஒவ்வொரு உண்மையான சபையிலும் உண்டு. (1 கொரி. 4 : 17).

12. வேறு செய்தியை எவரும் போதிக்கலாகாது. (கலா. 1:6-9;2 யோ :9).

13. வேறு செய்திக்கு எவரும் செவி சாய்க்கலாகாது. ( 2 கொரி. 11 : 3 -4: ரோ. 16 : 17).

14. கிறிஸ்து மட்டுமே அவருடைய சபைக்கு ஒரே தலைவர் (எபே. 1 : 22, 5 : 23; கொலே. 1 : 18), அவருடைய சபைக்கு போப் அல்லது வேறு தலைவர் இங்கு இல்லை.

15. பரலோகத்திலிருந்து கிறிஸ்து தமது சபையை ஆளுகிறார் - அவருடைய சபைக்கு இவ்வுலகில் தலைமையகம் கிடையாது. (எபே. 1 : 20 -23 : 5 : 24).

16. அவருடைய வசனத்தின் மூலமாக தமது சபையை கிறிஸ்து வளர்த்து வருகிறார் - மனிதனுடைய சட்ட புத்தகங்களோ, சின்ன, பெரிய குறிப்பிடங்களோ கிடையாது. (எபே. 5 : 26, 29).

17. கிறிஸ்துவின் சபையானது, விசுவாசிகள் வாழக்கூடிய அவருடைய சரீரமாகும். (கொலோ 1 : 18, 24).

18. உண்மையான விசுவாசிகள் அவருடைய சரீரத்தின் உறுப்புகளாக இருக்கின்றனர். (எபே. 5 : 30; 1 கொரி . 12 : 27).

19. அவருடைய சபை சத்தியத்தின் தூணும் ஆதாரமுமாக இருக்கிறது. (1 தீமோ. 3 : 15).

20. தேவைப்படும்போது, ஒவ்வொரு சபையும் மூப்பர்களை நியமிக்கிறது. (அப். 14 : 23. அவர்கள் சபை வளர்ச்சியைக் கவனிக்கவும் ( 1 தீமோ 3 : 5) ஆளவும் செய்கிறார்கள். (1 தீமோ. 5 : 17).

21. கிறிஸ்து சபையின் பிரதான மேய்ப்பராக இருக்கிறார்; அவருடைய சபையை மேய்க்கும் மூப்பர்கள் அவருக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். (1 பேதுரு 5 : 1-4;எபி. 13 : 17; அப். 20 : 28).

22. கிறிஸ்துவின் சபையிலுள்ள பலரை கள்ளப் போதகர்கள் புரட்டிப் போடக்கூடும். (அப். 20 : 29 -30).

23. அப்படிப்பட்டவர்களிடமிருந்து விலகிக் கொள்ள விசுவாசிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ரோ.16:17-18). உண்மை யுள்ளவர்களை கிறிஸ்து பாதுகாப்பார். (வெளி. 3 : 4 -5).

24. இறுதியாக, கிறிஸ்து, "கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்". (எபே. 5 : 27).

தமிழில் : எஸ். எஸ். ராஜன்.

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM**: Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, APRIL 1995
APRIL 1995, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -:அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK - POST

If undelivored Please return to
The Editor
THIRUMARAI AASAAN
POST BOX No. 27. KANGAYAM - 638 701